தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் ஹைதராபாத் நல ஆணையாளர் செயலாளராகவும், மாநில தொழிலாளர் நலத்துறையினுடைய ஆணையாளர் அவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாகவும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

முற்பகல் *11.05*

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் மிகமிக அதிகமாக வாழ்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லாத் தொகுதிகளிலும் பீடித் தொழிலாளர்கள் அதிகம் இருக்கின்றார்கள். மாவட்டத்தில் இரண்டே இரண்டு பீடித் தொழிலாளர்கள் மருத்துவ மனைகள்தான் இருக்கின்றன. எனவே திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கூறியது போல, திருப்பத்தூரிலோ அல்லது திருப்பத்தூருக்குப் பக்கத்திலே இருக்கிற வாணியம்பாடியிலோ மருத்துவமனை துவக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது மாநில அரசே இதைப்போன்ற ஒரு முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கூட்டத்தில் விவாதித்து அதற்குண்டான முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். *240*, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

240--

கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆதிதிராவிடர் நலவிடுதி அமைத்தல்.

22665–திரு. வீ. சுப்பிரமணியன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கண்டமங்கலம் ஒன்றியம், மிட்டா மண்டகப்பட்டு, சித்தலம்பட்டு ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் கண்டமங்கலம் ஒன்றியத்தில் உள்ள மிட்டா மண்டகப்பட்டு மற்றும் சித்தலம்பட்டு ஆகிய இடங்களில் ஆதி திராவிடர் நல விடுதி அமைக்கும் திட்டம் *1994-95*-ம் ஆண்டு பகுதி *2* திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று பதில் அளித்த அமைச்சர் அவர்களுக்கு, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, *1994*-ஆம் ஆண்டு துவக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினா எண்கள் *228* மற்றும் *229* இப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வினா எண் *228*, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

***228*--**

சங்கராபுரம் மணிமுத்தா நதி மற்றும் கோமுகி நதிகளை ஆழப்படுத்தும் திட்டம்

***16565*--திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்கராபுரம் தொகுதி, மணிமுத்தா நதி, கோமுகி நதி ஆகியவற்றை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.